செய்தி வெளியீடு எண்: 453 நாள்: 21.09.2016

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (21.9.2016) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ள 50 தேயிலை ஒத்த தொழிற் குழுக்களுக்கு (Common Livelihood Groups) 3 கோடியே 48 லட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்ட 50 இலை போக்குவரத்து வாகனங்கள், இடுபொருள் சேமிப்பு மற்றும் பசுந்தேயிலை கொள்முதல் மையம் அமைத்திட 1 கோடியே 10 லட்சம் ரூபாய் கடனுதவி ஆகியவற்றை வழங்கிடும் அடையாளமாக 5 குழு உறுப்பினர்களுக்கு வாகனங்களுக்கான சாவிகளையும் காசோலைகளையும் வழங்கினார்கள்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் ஒரே வகையான சிறு தொழில் செய்வோரை கிராம அளவில் ஒருங்கிணைத்து, தொடர் சேவைகளை மேம்படுத்தும் பொருட்டு, ‘‘பூச்சரம்’’ எனப்படும் ஒத்த தொழில் குழு (CLG) உருவாக்கப்பட்டு வருகிறது. ஒத்த தொழில் குழுக்களின் நோக்கமானது, ஒரே தொழில் செய்கின்ற தனிநபர்கள் ஒரே அமைப்பின் கீழ் ஒருங்கிணைந்து ஒருவருக்கொருவர் உதவிகள் செய்து கொள்ளவும், குழுவின் பொதுவான உட்கட்டமைப்பு வசதிகள், சந்தைப்படுத்துதல், தொழில்நுட்ப பயிற்சிகள் ஆகியவற்றை பயன்படுத்தி தாங்கள் செய்து வரும் தொழிலில் கூடுதல் வருமானத்தை பெறவும், அவர்களுக்கு வாய்ப்புகளை உருவாக்கி கொடுப்பதாகும்.

நீலகிரி மாவட்டத்தில் 2015–16ஆம் நிதியாண்டில் புதிதாக 50 தேயிலை ஒத்த தொழில் குழுக்களும் 3 இதர தொழில் குழுக்களும் அமைக்கப்பட்டன. இந்தத் தொழில் குழுக்கள், இந்திய தேயிலை வாரியத்தில் பதிவு செய்து சுழல் நிதி மற்றும் இதர உதவிகள் பெறும் பொருட்டு, தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்குழுக்களின் உறுப்பினர்களுக்கு குழு செயல்பாடு, பதிவேடுகள் பராமரித்தல் மற்றும் தொழில் நுட்ப பயிற்சி ஆகியவை வழங்கப்பட்டு, தமிழக அரசின் உள்கட்டமைப்பு நிதியாக தலா 1 லட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 53 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ள

50 தேயிலை ஒத்த தொழிற் குழுக்களுக்கு முதல் கட்டமாக, பேங்க் ஆப் இந்தியா வங்கிக் கடன் மூலமாக 3 கோடியே 48 லட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்ட 50 இலை போக்குவரத்து வாகனங்களையும் (BOLERO PIK UP FB P/S 2WD), இடுபொருள் சேமிப்பு மற்றும் பசுந்தேயிலை கொள்முதல் மையம் அமைத்திட 1 கோடியே 10 லட்சம் ரூபாய் கடனுதவியையும், 50 தேயிலை ஒத்த தொழிற் குழுக்களுக்கு வழங்கிடும் அடையாளமாக, 5 குழு உறுப்பினர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று வாகனத்திற்கான சாவிகளையும், காசோலைகளையும் வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி. வேலுமணி, தலைமைச் செயலாளர் முனைவர் பா. இராம மோகன ராவ், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் திரு. ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., பேங்க் ஆப் இந்தியா பொது மேலாளர் திரு. குல்பூஷன் ஜெயின், துணை பொது மேலாளர் திரு. கே.எஸ்.எம். சாஸ்திரி, முதுநிலை மேலாளர் திரு. ஜான் பிரிட்டோ மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை –9.
நாள் : 21.9.2016